உடனடியாகக் கிடைத்து விடுகிறது. அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அந்த நிலைமை நீடிக்கவிடாமல் இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் உள்ள மறைமலை நகர்ப்பகுதியில் தொழிற்பேட்டைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே மின்சாரம் நிச்சயமாகப் போதவில்லை. அதனால் அந்தத் தொழிற்சாலைகளில் அடிக்கடி மின் கட்டுப்பாடு வருகிறது. அதைத் தடுக்கும் வகையில் அங்குள்ள தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின் இணைப்பும், கூடுதலான மின்சாரமும் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 19—2—82 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7·58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படியுக்கான விதிகளும் ஆணைகளும்

101. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் 1980—81 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டு அறிக்கை (ஆங்கிலம், தமிழ்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

28. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981—82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1980—81—ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்சாரத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை (தமிழ், ஆங்கிலம்).

29. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980—81-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது, சட்ட மன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

30. 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக, அண்ணாமலைப் பல்கலைக்கழக, பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 8/1982)

31. 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1982).

32. 1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப வியல் பல்கலைக் கழக (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவின் நகலும இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1982).

33. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்த சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண், 11/1982).

இணைப்பு I

232-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினாதாள் 244-க்கான விடையைக் காண்க).

விவர அறிக்கை.

ஆலய ஊழியர்களின் சம்பள விகிதம் அண்மையில் மாற்றியமைக்கப்பட்டது குறித்து:

2. துணை/உதவி ஆணையர்கள் செயல் அலுவலர்களாக உள்ள ஆலயச் சிப்பந்திகளுக்கு 1-7-1979 முதல் ரூபாய் 10 முதல் ரூபாய் 40 வரை ஊதிய உயர்வு கிடைக்கும் வகையில் திருத்தப்பட்ட சம்பள விகிதம் அனுமதிக்கப்பட்டது. அதாவது ஆலய ஊழியர்களுக்கான சம்பளம் "அந்தந்த ஆலயங்களின் மொத்த வருவாயில் 30 சதவீதத்திற்கு மிகா வண்ணம் வழங்கப் பட்டது. இதர ஆலய ஊழியர்களுக்கும் மேல் நிலை சிப்பந்திகளுக்கு மாதம் ரூ. 10 வீதம் கீழ்நிலை சிப்பந்திகளுக்கு மாதம் ரூ. 5 வீதமும் 1-7-1979 முதல் சம்பளத்தில் உயர்வு அளிக்கப் பட்டது. தற்போது ஆலயச் சிப்பந்திகள் சம்பளச் செலவு அனைத்து வருவாயில் 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

3. ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசாமி ஆலய பணியாளர்களின் அக விலைப்படி மற்ற ஆலயங்களின் அக விலைப்படிக்கு வித்தியாசமாக இருந்ததால், அக விலைப்படியை சம்பளத்தில் சேர்த்து மீண்டும் 1-2-1980 முதல் சம்பள விகிதம் திருத்தி புதிய சம்பளப் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசாமி ஆலயத்தின் சிப்பந்திகள் சம்பள விகிதம் மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும். சம்பள விகிதத்தினையொட்டி 1-2-1981 முதல் திருத்தி 28-2-1981-ல் புதிய சம்பளப்பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY